# கிழக்கு மாகாணத்தின் மீன்பிடி

**கலாநிதி பெ. வினோபாபா**
*சிரேஷ்ட பேராசிரியர்*
*விலங்கியல் துறை,கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

இலங்கை ஓர் தீவாக அமைந்திருப்பதினால், மீன்பிடித்துறையே அதிகளவான மக்களின் ஜீவனோபாயத்திற்கு உதவுகின்றது. இலங்கையின் கடல் பரப்பு இலங்கையின் நிலப்பரப்பளவிற்கு ஏறத்தாள சமனான பரப்பளவு ஆழம் குறைவான கண்டமேடையை உள்ளடக்கி வியாபித்துள்ளது. இங்குதான் கரையோர மீன்பிடித்தல் நடைபெறுகிறது. மீன்பிடித்துறை கிழக்கு மாகாணத்திற்கு பாரிய சமூக பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது. கடலிலும் அதனுடன் இணைந்த நீர்நிலைகளிலும் (வாவிகளும், குளங்களும்) இங்கு நிரம்பக் காணப்படுவதால் மக்கள் தங்கள் வரையறைக்குட்பட்ட விதத்தில் தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்துவந்த மீன்பிடி முறைகளினாலும், தற்கால நவீனயுகத்தில் உட்புகுத்தப்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் பாவித்து மீன்பிடித்தலில் ஈடுபடுகின்றனர். இவ்வளத்தினை பிற்கால சமுதாயத்திற்கு உதவும் வகையில் சரியான திட்டமிடலும் முகாமைத்துவ நடைமுறைகளையும் பயன்படுத்தினால் பிற்கால சந்ததியும் கடல் வளங்களை சார்ந்த தொழில் முறைகளில் ஈடுபட்டு நாட்டினையும் பிரதேசத்தையும் சுபீட்சமடையக்கூடியதொன்றாக மாற்ற முடியும். கடந்த இரண்டு, மூன்று தசாப்தங்களாக இருந்து வந்த உள்நாட்டுப் போரினால் கிழக்கு மாகாண மீன்பிடித்துறை பொதுவாக பாரிய பின்னடைவுகளை சந்தித்தே வந்துள்ளது. ஆயினும் யுத்த சூழல் முடிவுற்ற இன்னிலையிலும் கிழக்கு மாகாணத்தில் தற்போது மீன்பிடி அபிவிருத்திக்கான தகுதியான, பொருத்தமுடையதும் நடைமுறைப்படுத்தப்படக்கூடியதான திட்டவரைவு ஏதாவது உள்ளது என்பது சந்தேகத்திற்குரியது.


## கிழக்கு மாகாண மீன்பிடி சூழல்

கிழக்கு மாகாண மீன்பிடி சூழல் தொகுதி மூன்று நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியது. அவையாவன திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகும். இம்மாகாணம் 361 km நீளமான கடற்கரையை கொண்டுள்ளது. இங்குள்ள கண்டமேடை மிகவும் ஒடுங்கியது. இதன் சராசரி அகலம் 12.6 km ஆக இருக்கையில் திருகோணமலை நகரில் 2.1 km அகலம் ஆகவும் பாணம இல் 20.1km அகலமாகவும் உள்ளது. கிழக்கு கண்டமேடையின் பரப்பளவு 4549 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். இக்கண்டமேடையின் அடித்தளம் பொதுவாக சமனற்ற கரடுமுரடான பாறைகளையும் சில இடைவெளிகளில் மணல் மேடுகளாகவும் காணப்படுகின்றது. இவ்வாறான அடித்தளம் மட்டக்களப்பில் இருந்து குமணவரை வியாபித்துள்ளது. இவ்வாறான்றி கொக்கிளாய்க்கும் திருகோணமலைக்கும் இடையிலும் அதேபோன்று திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும் இடையில் சில சமனான அழுத்தமான மணற்பாங்கான அடித்தளத்தைக் கொண்டுள்ளது. கண்டமேடையின் சாய்வானது கடற்கரையிலிருந்து ஆழ்கடலை நோக்கி 1000 m வரை சாய்ந்துள்ளது. இலங்கையானது 200 கடல் மைல்கள் தனக்கே உரித்தான பொருளாதார வலயத்தை (EEZ) கெண்டுள்ளது. கிழக்கு மாகாணத்திற்குரிய EEZ வேறு நாடுகளிற்குரிய வியாபகத்தினைக் கொண்ட சர்வதேச உயர்கடல் வலயங்களுடன் தொடர்புபட்ட ஆழமான கடலுடன் தொடர்புற்றுள்ளது.


கண்டமேடைகளில் முருகைக்கற் பாறைகளின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. விசேடமாக fringing reefs திருகோணமலைக் குடாவில் Pigeon Island இலும், பாசிக்குடா, வாகரை (சல்லித்தீவு கடற்கரை), கற்குடா ஆகிய பிரதேசங்களில் காணப்படுகிறது. திருகோணமலைப் பிரதேசத்தில் காணப்படும் முருகைக் கற்பாறைகள் ஆழம் கூடிய நிலைமையில் காணப்படுதனால் வெப்பம் கூடிய கடல் நீரோட்டத்தினால் பாதிக்கப்படுவதில்லை. ஏனைய பிரதேச முருகைக்கற்கள் இறப்பிற்குள்ளாகின்றன. இதனால் முருகைக்கற் பாறையில் பாதுகாப்பாக வாழும் மீனினங்களும் அழிவடையும் நிலைமைகளும் உருவாகியது.

கிழக்கு மாகாணத்தில் கடற்கரை வாழ்விடங்களை பின்வருவன பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அவையாவன கண்டல்கள், உவர் சேற்று நிலங்கள், மணற்திட்டுக்கள், கடற்கரையோரம், நதி, ஆற்றுமுகத்துவாரங்கள், களப்புக்கள், நன்னீர் சேற்று நிலங்கள் என்பனவாகும். இங்கே 39,234 ஹெக்டயர் பரப்பளவு கொண்ட 47 வாவிகளும், உவர்சேற்று நிலங்களுமே மீன்பிடிக்கு முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக கருதப்படுகிறது.

Distance from shore of 100 and 1000m isobaths




Bottom characteristics of continental shelf of Eastern Province




*11,500* ஹெக்டயர் பரப்பளவைக் கொண்டதும் *56* km நீளத்தையும் *6* மீற்றர்கள் ஆழத்தினையும் கொண்ட மட்டக்களப்பு வாவி இலங்கையில் காணப்படும் முக்கியமான பெரிய வாவிகளில் ஒன்றாகும். இது தற்போது விசேட முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய பிரதேசங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. (Special area management site- SAM site) இந்த வாவி சூழலியல் ரீதியாகவும், பூகோளத்திற்குரிய வகையிலும் மூன்று பகுதிகளாக பிரிக்கப்படும். முகத்துவாரத்தை சென்றடையும் கான் / கால்வாய் போன்ற பகுதியும் வடக்கே ஏறாவூர் வரை வியாபித்த பிரதேசம் வடக்குப் பிரதேச வாவி எனவும் அம்பாறை மாவட்டத்திற்கு அண்மித்து செல்லும் (கிட்டங்கி) வாவிப்பகுதி தெற்குப் பிரதேச வாவி எனக் கூறப்படுகிறது. வடக்குப் பிரதேச வாவியில் உயர்ந்த உவர்ப்புத் தன்மை நீர் காணப்படும். இங்கு நகரக்கழிவுகள், பயிர்ச்செய்கை பிரதேசமான வயல்களில் இருந்து வரும் பயிர்ச்செய்கைக் கழிவுகள் - விவசாய உள்ளீட்டுக்கழிவுகள், இறால் பண்ணைக்கழிவுகளினை தாங்கும் ஊடகமாக செயற்படும்.

தெற்குப் பிரதேசம் உவர்ப்புத் தன்மை குறைந்த நீரினைக் கொண்டுள்ளது. சில பகுதிகளில் வாவி நீர் விவசாயத் தேவைகட்கும் பயன்படுத்தப்படுகின்றது. இங்கு மணல்மேடையானது வாவியையும் கடலையும் பொதுவாக முழுமையாக நீண்ட காலத்திற்கு தனிப்படுத்தி வைக்கப்படுகிறது. *(10* மாதங்களிற்கு மேலாக) மார்கழி, தை மாதங்களில் வெள்ளம் கூடும்போது

உள்ளூர் விவசாயிகள் வெள்ளப் பெருக்கு அபாயங்கள் ஏற்படலாம் என்று எண்ணியே மணல் திட்டினை செயற்கையாக வெட்டி திறக்கின்றனர்.

**உயரினங்கள்**

800 இற்கும் அதிகமான கடல்வாழ், நீர்வாழ் உயிரினங்கள் இலங்கையில் காணப்படுகிறது. இவற்றில் 16 கடல்வாழ் பாலூட்டிகள் காணப்படுகின்றன. அவையாவன டொல்பின், திமிங்கிலம், கடற்பசு (Dugongs). திருகோணமலைக்கு அண்மிய கடற்பரப்பில் March - August வரையான காலப்பகுதியில் நாள் ஒன்றிற்கு 3-5 திமிங்கிலங்கள் கரையிலிருந்து 6-10 km இடைப்பட்ட தூரத்தில் தென்படுவதனால் சுற்றுலாப்பயணிகளை கவரும் தன்மை காணப்படுகிறது.
கிழக்கு மாகாணத்தில் பிடிக்கப்படும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இனங்கள் பின்வருவனவாகும்.

மேற்பரப்பிற்குரிய இனங்கள்: சூடை இனங்கள், நெத்தலிமீன்கள் *Amblygaster sirm, Sardinella gibbosa, S.albella, Stolephorus indicus*), பறவை மீன்கள், mackerel, scads.
பெரிய இடைத்தரமான மேற்பரப்பிற்குரிய இனங்கள்:
Yellow fin tuna, big eye tuna, skipjack, seerfisn, half beak (முரல்) needle fish,sail fish sword fish, marlin, pelagic sharks.

இடைத்தளத்திற்குரிய, முருகைக்கல்பாரையில் இருக்கும் மீனினங்கள்.
Snapper, Grouper (கலவா), emperors, trevally, queen fish, ribbon fish, skates (திருக்கை), Triggerfish

ஓட்டுமீன்கள் (Crustaceans): மட்டு இறால்/கருவண்டன் இறால் (*Penaeus Monodon*) வெள்ளை இறால் (*Penaeus indicus, Metapenaeus sp*)
*Scylla serata* (பெருநண்டு/சட்டிநண்டு) சிங்க இறால் (Spiry lobster)

மெல்லுடலிகள் (Molluscs): கணவாய் (Squds cuttle fish) Snails (சங்குகள்), Bivalves இருவால்வுகள் அல்லது கவாட்டிகள்)

வேறு முள்ளந்தண்டில்லா உயிரினங்கள்: கடலட்டை (Sea Cucumber)

கடல் அல்காக்கள் : கிறசிலேரியா (Gracillaria sp)

வாவிக்குரிய மீன் வளங்கள், கிழக்கு மாகாண வாவிகள் யாவும் உவர் நீரிற்குரிய மீன்களையும் முள்ளந்தண்டில்லா விலங்குகளையும் சிறப்புறக் கொண்டுள்ளது. அவையாவன ஓட்டி இனங்கள் (Rabbit fish), மணலை (Mullet), பாலை மீன் (Milkfish) செத்தல் *(Etroplus sp) Tilapiasp* செல்வன், காரல்கள் Lleiognathids), Gerrids -(திரளி), இறால் (*Pernaens mondon P. indicus, P.semisulcatus, Tilapia sp, Metapenaeus dobsoni, M.ensis* நண்டு (பெருநண்டு) *Sylla serrata*, சிப்பிகள் (Oysters) கவாட்டிகள் mussels முகத்துவாரம் திறந்திருக்கும் மழைவீழ்ச்சியையுடைய வடகீழ் பருவப்பெயர்ச்சிக்காலத்தில் சிலசெட்டை மீனினங்களும் இறால்களும் வாவியுள் புகுகின்றன. மட்டக்களப்பு வாவி முகத்தவாரத்தில் இறாலின் பிற்கால குடம்பிகளும் (Postlarvae) பாலை மீனின் குஞ்சுகளும் உட்புகுந்து உணவூட்டல் நடைபெற்று விருத்தியாகும் இடமாக காணப்படுவதால் கிராமத்திற்கே பாலை மீன்மடு என பெயர் பெறக் காரணமாக இருந்திருக்கிறது.




மழைகாலங்களின் போது முகத்துவாரம் இயற்கையாகவோ அல்லது மனித தலையீட்டினாலோ திறக்கப்படும்போது கடல் மீனினங்களின் விருத்திப் பருவங்களும் ஓட்டு மீன்களின் விருத்திநிலைகளும் வாவிகளுக்குள்

நகர்வடைந்து வாவி மீன்களின் அளவை மாறுதலடையச் செய்யும் (அதிகரிக்கும்). இது வாவிகளை அண்டியிருக்கும் மீனவர்களின் வருமானத்தை அதிகரிக்கும். குறிப்பாக இறால் பிடிக்கும் அளவு பருவகாலத்தில் அதிகரிக்கும். கோடை காலங்களில் மீன்கள் பிடித்து அகற்றப்படுகின்றன. இச்சமயங்களில் முகத்துவாரம் மூடிக் காணப்படுவதால் மீன்களின் பரிமாற்றம் கடலில் இருந்து நடைபெறாது.

**மீன்பிடி முறைகள்**

கிழக்கு மாகாணத்தில் கடல், வாவி, மற்றும் நன்னீர் மீன்பிடிகள் காணப்படுகின்றன. இவற்றில் பாரிய அளவில் உபகரணங்கள் பாவித்து நடைபெறும் மீன்பிடி கடல் நீர் மீன்பிடியாகும். எனினும் நாட்டில் நிலவிய சீரற்ற சூழ்நிலை காரணமாக பல மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்பட்டதனால் தற்போது குறைந்த எண்ணிக்கையிலேயே பயன்படுத்தப்படுகின்றன. பெரிய ஆழ்கடல் மீன்பிடி முறைகள் ஊக்குவிகப்படாமல் சிறிய மூலதனம் தேவைப்படும் கடல் தோணி, வாவித் தோணிகளுடன் தேவைப்படும் வலைகளும் அரசாங்க மானியத்தினாலும், அரச சார்பற்ற பல நிறுவனங்களினாலும் இடையிடையே வழங்கப்பட்டு வந்துள்ளன. 2000 - 2002 ஆம் ஆண்டுப்பகுதிகளில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் வெளிநாட்டு மீன்பிடிப்படகுகள் இலங்கைக்குரிய பொருளாதார வலயத்தினுள் புகுந்து சுருக்குவலை, வெளிச்சத்தினால் மீன்களை கவர்ந்து பிடிக்கும் முறைகளைப் பாவித்து மீன்பிடித்து சென்றதால் கிழக்கு மீனவர்கள் எரிபொருளைச் செலவளித்து மீன் இன்றி கரைசேரும் நிலைமைகளையும் சந்தித்தே வந்திருக்கிறார்கள்.

சிறிய தொழிற்சாலை முறைக்குரிய ஆழ்கடல் மீன்பிடி பெரிய பல்நாட்கலங்களில் ஐஸ் அடைத்து பாதுகாக்கும் வசதிகள், ரேடியோ தொடர்புகொள்ளும் வசதி என்பவற்றைக்கொண்ட கப்பல்களில் இருந்து நீண்ட தங்கூசிகள் (long lines), மிதக்கும் பூவலைகள் (Dritf gillnets) பாவித்து சிறிய மேற்பரப்பு மீன்கள் (Small pelagics), பாரை வகைகள் (tuna), மேற்பரப்பிற்குரிய சுறாக்கள் (Pelagic sharks) பிடிக்கப்படுகின்றன.

இதைவிட நாரிழையால் ஆன கப்பல்களின் (FRP) உதவியுடன் பாரை மீன் இனங்களை பிடிக்கும் நோக்குடன் பெரிய கண்ணளவு உடைய மிதப்புவலைகள், கையால் விடும் தங்கூசி (hand line) நீளமான தங்கூசிக்கூட்டு (long lines), இழுவை வலை பாவித்து பிடித்தல், சிறிய கண்ணளவு உடைய மிதப்பு பூவலைகள் போன்றன பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் இப்பிரதேசத்தில் கடல் தோணிகளின் உதவியுடன் தங்கூசி பாவித்தும்

இடைவலயத்திலும் முருகைக் கற்பாறைகளினுள் காணப்படும் மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

மணற்பாங்கான கடற்கரைகளில் மட்டும் மிகப்பெரியளவான மனிதவலுவுடன் (40பேர்) கரை வலையிழுத்தல் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதன் போது சிறிய மேற்பரப்பில் காணப்படும் மீனினங்களும் ஆழம் குறைந்த நீரில் காணப்படும் மீன்குஞ்சுகளும் பிடிக்கப்படுகின்றன.

வாவியில் இயந்திரங்கள் இணைக்கப்படாத தோணியில் இருந்து வீச்சுவலையும், உயிருள்ள, உயிரற்ற இரைகொழுவிய தங்கூசிவிட்டு மீன்கள் பிடிக்கப்படுகின்றன. மட்டக்களப்பு வாவியில் 1972ஆம் ஆண்டிற்கான மீன்பிடிப்பதற்கான சட்டவரைவின்படி சில பகுதிகளில் மட்டுமே மிதப்பு வலை, பூவலை பாவிக்கப்படலாம். வலையின் கண்ணளவு 6 அங்குலத்திற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். மேலும் இறால் பிடிப்பதற்கு கொத்து அடைத்து வீசும் நடைமுறையும் அனுமதி பெற்று செய்யும் நிலையுண்டு. மேற்குறித்தவை தவிர தோணியின் உதவியின்றி மனிதன் நடமாடக்கூடிய ஆழம் குறைந்த பிரதேசத்தில் வீச்சு வலையினை பாவித்தும், பழைமையான முறையான கையால் இறால் பிடிப்பவர்களையும் காணக்கூடியதாக உண்டு. இந்த இடங்களில் சிலர் சட்டத்தினை மீறி பாவிக்க முடியாத வலையான முக்கூட்டு வலை (Tramel net) டிஸ்கோவலை (Disco net) என்பவற்றை பாவித்து மிகச்சிறிய மீன், இறால் போன்றவற்றைப் பிடித்து அகற்றுவதால் எதிர்காலச் சந்ததிக்குரிய மீன் இனங்களும் இறால் இனங்களும் அழிந்து இல்லாமல் போகும் சாத்தியக்கூறுகளும் உண்டு. நன்னீர் குளங்களில் தோணியின் உதவியுடன் அல்லது தோணி இன்றி வீச்சு வலையும் பூ வலையின் உதவியுடன் மீன் பிடிக்கப்படுகிறது.

**மீன் சந்தைப் படுத்தல்**

திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையான பல்நாட்கலங்கள் பாரை போன்ற மீன்களை நோக்காகக் கொண்டு செயற்படுகின்றன. திருகோணமலையில் பிடிக்கப்படும் மஞ்சள்பாரை, சுறா செட்டை குளிரூட்டப்பட்ட லொறி மூலம் கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. சுறாவின் செட்டை தவிர்ந்த ஏனைய எச்சங்கள் அல்லது மீதங்கள் அருகிலிருக்கும் சந்தையில் உள்ளூர் பாவனையாளர்களிற்கு விற்கப்படுகிறது. கல்முனை, பொத்துவில், சின்ன உல்லை, பெரிய உல்லை பகுதிகளில் பிடிக்கப்படும் ஆழ்கடல் மீன்களான பாரை வகைகள் (yellow fish tuna, Skipjack tuna) கொழும்பு சந்தைக்கு அனுப்பப்படுகிறது.

திருகோணமலையில் இயற்கைத் துறைமுகம் அமைந்திருப்பதனால் பல்நாட்கலங்களிற்கான இறங்குதுறை வசதிகள் உண்டு. அதேசமயம்

மட்டக்களப்பில் ஓட்டமாவடி, வாழைச்சேனை போன்ற பகுதியில் சிறிய இறங்குதுறைகள் (Anchorage) இருப்பதால் பல்நாட்கலங்களை கட்டும் வசதியுண்டு. இருப்பினும் வேறு இடங்களில் இவ்வசதிகள் இல்லை. அம்பாறையில் நாட்கலங்கள் அதிக எண்ணிக்கையில் உண்டு. மேலும் பெரிய வகையான கலங்களிற்கு முதலாளிமார் கடன் கொடுத்து உதவிய முறையால் பிடிக்கப்படும் மீன் குறித்த முதலாளிக்கே வழங்கப்படல் வேண்டும். மீனின் விலை முதலாளியால் நிர்ணயிக்கப்படும். இந்த சந்தைப்படுத்தல் முறையினால் கடன் பெற்றவர்கள் அசாதாரண நிலைமையினை சந்திப்பதாகவே கருதப்படுகின்றது.

மீன் சந்தைப்படுத்தலில் இரண்டு முறையான விற்பனை முறைகள் இம்மாகாணத்தில் காணப்படுகின்றது. திறந்த ஏல விற்பனையில் மீனவர் கடன்பட்டிருக்காவிடில் இம்முறையில் கூடிய விலைக்கு தான் பிடித்த மீன்களை விற்பனை செய்யலாம். மற்றையது குறித்த விலைமுறை இங்கு கடன்பட்டவர்களிற்கு முதலாளி குறிக்கும் விலைக்கே மீனைக் கொடுக்க வேண்டும். மேலும் முதலாளி கடன், வட்டியென்று கழிப்பது எப்போது முடியும் என மீனவனிற்கு தெரியாது. முதலாளிக்கு மட்டுமே தெரியும். கிழக்கு மாகாணத்தின் மீன்பிடி உற்பத்தி ஏறத்தாழ 35,500 தொன்களாகும். இதனளவு தற்போதைய ஆண்டுகளில் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது. இப்படி இருந்தாலும் முன்பிருந்த உச்சநிலையை எட்டவில்லை. அதிகளவு வளர்ச்சி திருகோணமலை மாவட்டத்திலேயே அவதானிக்கப்பட்டுள்ளது.

**கடல் மீன்பிடி முகாமைத்துவம்**

கடலில் மீன்பிடிப்பதற்கு பல வேறுபட்ட பாதுகாப்பு நடைமுறைகளினால் ஆழ்கடலிற்கு சென்று மீன்பிடிப்பதில் மீனவர்கள் நாட்டம் காட்டாது கரையோரங்களில் மீன்பிடிப்பதால் மீன்குடித்தொகைக்கும் கரையோரத்தில் காணப்படும் மீன் இனப்பெருக்க வாழிடங்களான கடற்புற்கள், முருகைக்கற் பாறைகள் அழிவடைகின்றமையால் மீனின் இனப்பெருக்கத்திற்கும் பங்கம் ஏற்படுகிறது. பொதுவாக கடலில் மீன்பிடிப்பதற்கான சட்டவரைவுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளில் அமுலில் உள்ளது.

அவையாவன: பொதுவான மீன்பிடிக் கொள்கை (Common Fishery Policy), அனுமதிக்கப்பட்ட மீன்பிடி அளவு (Total Allowable Catches), கடலை விரிந்தறியும் சர்வதேச மையம் (International Council for the Exploration of the Sea (ICES), இங்கு சில பிரதேசங்களில் சிலகாலத்தில் மீன்பிடிக்க முடியாது என்ற தடையை அமுல்படுத்துவார்கள். நம் நாட்டில் இவ்வாறான தடை அமுலில் இருந்ததா? ஏன் தடை அமுல்படுத்தப்பட வேண்டும் என்று யாராவது யோசித்ததுண்டா? மீன்பிடிக்கான தடையானது சந்ததியின் பிற்கால நன்நோக்கோடு நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய ஒரு முக்கியசெயலாகும். அயனமண்டல நாடுகளில் மழை வீழ்ச்சியுடன் நீரின் வெப்பநிலை

குறைவடையும் இது மீனின் இனப்பெருக்க விருத்தியை தூண்டும். மழைகாலத்தில் சினைகொண்ட மீன்களையும், நண்டு, இறால் என்பவற்றை வாவியிலும் கடலிலும் காணக்கூடியதாயிருந்தது. சில குறித்த சூழற்தொகுதிகளில், கண்ணாக் காடுகள், முருகைக் கற்பாறைகளிற்கிடையே சினைகொண்ட மீன்கள் காணப்படலாம் இவற்றை பிடிப்பதை தவிர்ப்போமாயின், அல்லது இனப்பெருக்க பராயமடைந்த நண்டு, இறால், மீனை கொல்லாது நீரில் விடுவோமேயானால் பல மீன், இறால், நண்டினை சூழலில் சேர நாம் அனுமதிக்கிறோம். இதற்காகவே இனப்பெருக்கம் நடைபெறும் காலம், இடம் என்பன பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மீன்பிடிக்க தடைசெய்யப்படும் இடம், காலம் என்பன பரிந்துரைக்கப்படவேண்டும்.

மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட வலைகளையே உபயோகித்தல் வேண்டும். மிக முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டியது வலையின் கண்ணளவு, கண்ணளவு பெரியதாக இருப்பின் உயரம் அல்லது அகலம் கூடிய மீன்களே பிடிபடும். சிறியவலை மிகச் சிறிய இனப்பெருக்க மடையாத இளம் மீன்களையே பிடிக்க உதவும். நீண்டகால நோக்கில் இது சாதகமான பலனை கொடுக்காது. எனவே னியிழையினால் ஆன வலைகள், முக்கூட்டு வலைகள், டிஸ்கோ வலைகளை போன்றவற்றினைப் பாவிப்பதனை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

மேலும் கிழக்கு மாகாணத்தில் பல இடங்களிலும் பரவலாக dynamite (டைனமைட்) பாவித்து மீன்பிடிப்பது பற்றிக் கூறப்பட்டே வந்துள்ளது. யாரும் இவற்றை தடுக்க முன் வரவில்லை. டைனமைட் பாவிக்கும் போது வெளிவிடப்பட்ட அதிர்ச்சியினால் வயது வேறுபாடற்று மீன்களின் காற்றுப்பை சேதமடைய மீனின் மிதப்பு சமநிலை குறைவதோடு இறப்பும் நடைபெறுகிறது. இங்கு சிறிய மீன் குஞ்சுகள் அதிகளவில் இறப்பின் பிற்காலத்தில் அறுவடையாக வேண்டியவை அழிவடைவதால் மீன்கள் இல்லாதநிலை தோன்றும். சில மீன்கள் சில குறித்த பகுதிகளிற்கே உரித்தான இனங்களாக இருக்கலாம். அப்படியான இனங்கள் அழிவடையும் சாத்தியக்கூறுகள் உண்டு.

மேலும் மீனவர்கள் பாவிக்கும் வலை, தங்கூசி என்பன காலத்துடன் பழுதடைந்து துண்டுகளாகி, நீரினுள் சென்றுவிடலாம். இறுதியில் இவை யாரும் அறியாது மீனைப்பிடித்து இறப்பிற்குள்ளாக்கி மீன் அழிவடையும். இது பிசாசு மீன்பிடி என கூறப்படும் (Ghost Fishing) இதன் காரணமாக மீன் இனங்கள் அழிவிற்குள்ளாகலாம்.

மீன்களைப் பிடிக்கும் போது கடலில் அருகிவரும் கடல் பாலூட்டிகளான டொல்பின் போன்றன வலையில் அகப்பட்டால் அவற்றை உயிருடன் கடலிலே

விட்டு விட வேண்டும். அதே போன்று கடல் ஆமைகளையும் உயிருடன் விட்டுவிட வேண்டும்.

கடலில் படகுகள் நங்கூரமிடும் போது மீன்கள் பல்கிப் பெருகுமிடங்களாகிய முருகைக்கற்பாறைகளின் மேல் இடாது தவிர்ப்பதும் சினையுடன் மீன், நண்டு, இறால் என்பவற்றை பிடிக்காதும், வாவி, அல்லது கடலில் எண்ணெய் மற்றும் கழிவுகளை சிந்தாது சூழலை பேணிப் பாதுகாத்தால் அச்சூழல் மனிதனின் நீண்ட காலத்திற்கு தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆரோக்கியமான வளம்மிக்க சூழற் றொகுதியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையின் மேற்கு, தெற்கு கடற்கரையில் உள்ள மீனினத்தின் குடித்தொகையளவு (*1978-1980*) R.V.Fridtj of Nasen என்ற நோர்வேக்குரிய கப்பலின் துணையோடு துணியப்பட்டது. அதிலிருந்து எவ்வளவு மீன் ஆண்டொன்றிற்கு பிடிக்கப்படலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டது. இவ்வாறான ஒரு ஆய்வுகளும் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

கடற்றொழில், மீன்பிடி சார்பாக பல சட்டங்கள் இயற்றப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் தான் பலவீனங்கள் உண்டு. இவற்றை தவிர்ப்பதற்கு மீனவர்களுக்கு சமுதாய சமூகமட்டத்தில் விழிப்புணர்வு கருத்தரங்குகளை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை வைத்து நடைமுறைப் படுத்தவேண்டும். இதற்கான பொறுப்புடையவர்கள் தேவைகளை உணர்ந்து நடப்பார்களேயானால் தான் ஒரு நடைமுறைச் சாத்தியமான முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

*****

*"The most important word in the language of the working class is SOLIDARITY"*

*- Harry Bridges*